மாநகர் போக்குவரத்துக் கழகம்

(சென்னை) வரையறுக்கப்பட்டது

Metropolitan Transport Corporation

(Chennai) Limited

49 வது ஆண்டறிக்கை

2020 - 2021

th Annual Report

மாநகர் போக்குவரத்துக் கழகம்
(சென்னை) வரையறுக்கப்பட்டது.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பல்லவன் இல்லம்,

அண்ணாசாலை, சென்னை - 600 002.

49வது ஆண்டறிக்கை 2020 - 2021

49th Annual Report 2020 - 2021

METROPOLITAN TRANSPORT CORPORATION

(CHENNAI) LIMITED.

(A Government of Tamilnadu Undertaking)

Pallavan House,

Anna Salai, Chennai - 600 002.

பொருளடக்கம்

இயக்குநர்கள் குழு	3
வங்கிகள் & பணிமனை பெயர்	4
தலைவர் உரை	6
இயக்குநர்களின் அறிக்கை	10
ஆண்டு கணக்கு விவர அறிக்கையின் பகுதி நகல் MGT 9	26
செயல்திறன் குறித்த முக்கிய விவரங்கள்	42
இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் அவர்களின் கருத்துரை	50
திருத்தப்பட்ட தனிப்பட்ட தணிக்கையாளர்களின் அறிக்கை	52
ஐந்தொகைக் குறிப்பு	84
ஆதாய - இழப்புக் கணக்கு	86
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்	88
பணப்புழக்க நிலை அறிக்கை	136

CONTENTS

Board of Directors	3
Bankers & Depot Name	4
Chairman's Speech	7
Report of the Directors	11
Extract of Annual Return - MGT 9	27
Select Indicators on the performance	42
Comments of the comptrollers & Auditor - General of India	51
Revised Independent Auditors' Report	53
Balance Sheet	84
Statement of Profit and Loss	86
Notes to Financial Statements	89
Cash Flow Statement	137

இயக்குநர்கள் குழு

தலைவர்
திரு. டாக்டர். கே.கோபால், இ.ஆ.ப.

மேலாண்மை இயக்குநர்
திரு. எ.அன்பு ஆபிரகாம், பி.டெக்.,

இயக்குநர்கள்
திரு. பிரசாந்த் எம்.வடநேரே, இ.ஆ.ப.,
திரு. எஸ்.நடராஜன், இ.ஆ.ப.,
திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,
திரு. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
திரு. ஆர். விஸ்வநாத், எம்.இ.
திரு. வி. வேங்கடராஜன், எம்.காம்.,எசிஎம்எ.,பிஜிடிஎப்எம்
திரு. ஆர். பொன்முடி, பி.இ., எம்.பி.எ., டிஐஎஸ்., டிஐஎ.
திரு. ஆர். முத்துக்கிருஷ்ணன், பி.ஈ. எம்.எஸ்.சி.
திரு. எஸ். ரங்கநாதன், பி.ஈ.

தற்சார்பு இயக்குநர்
திரு. வி. அமுதன், பி.இ., எம்எஸ், பி,எச்டி

மகளிர் மற்றும் தற்சார்பு இயக்குநர்
திருமதி. ப்ரியா வேணுகோபால், எப்.சி.ஏ., டி.ஐஎஸ்ஏ

முதன்மை நிதி அலுவலர்
திரு.வி. சங்கர், பி.ஏ, எ.சி.எம்.ஏ., ஏசிஎஸ்.,பிஜிடிசிஏ

நிறுவனச் செயலர் (பொறுப்பு)
திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், பி.காம்., எம்.பி.ஏ., ஐசிடபிள்யுஏ

உள் தணிக்கையாளர்கள்
திருவாளர்கள் சுந்தரம் & சீனிவாசன்
திருவாளர்கள் டி.என்.வி. & அசோசியேட்ஸ்
திருவாளர்கள் என். ராஜா & அசோசியேட்ஸ்
திருவாளர்கள் வி. கிருஷ்ணன் & கோ
திருவாளர்கள் சி. ஸ்ரீனிவாசன் & கோ.
திருவாளர்கள் எஸ்.பி. அசோசியேட்ஸ்

BOARD OF DIRECTORS

CHAIRMAN
Thiru Dr. K. GOPAL, I.A.S,

MANAGING DIRECTOR
Thiru A.ANBU ABRAHAM,B.TECH.,

DIRECTORS
Thiru PRASHANT M.WADNERE, I.A.S.,
Thiru S.NATARAJAN, I.A.S.,
Thiru GANGANDEEP SINGH BEDI., I.A.S.,
Tmt . KAKARLA USHA I.A.S.,
Thiru R. VISWANATH,M.E.,
Thiru V. VENKATARAJAN , M.COM.,ACMA.,PGDFM.,
Thiru R.PONMUDI, B.E., M.B.A., D.I.S., D.I.A.,
Thiru R MUTHU KRISHNAN, B.E.,M.SC
Thiru S.RENGANATHAN, B.E.,

INDEPENDENT DIRECTOR
Thiru V.AMUDHAN, B.E., MS. ,PHD.,

WOMAN CUM INDEPENDENT DIRECTOR
Tmt. PRIYA VENUGOPAL, FCA, DISA,

CHIEF FINANCIAL OFFICER
Thiru V SANKAR.,BA.,ACMA.,ACS.,PGDCA.,

COMPANY SECRETARY i/c
Thiru .S.BALASUBRAMANIAN, B.COM, MBA, ICWA.,

INTERNAL AUDITORS
M/s. S.SUNDARAM & SRINIVASAN
M/s. D.N.V. & ASSOCIATES
M/s. N.RAJA & ASSOCIATES
M/s. V.KRISHNAN & CO
M/s. C.SRINIVASAN & CO.
M/s. S.P.ASSOCIATES

வங்கிகள் :

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,
கதீட்ரல் கிளை,
762, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
ஓவர்சீஸ் கிளை,
86, ராஜாஜி சாலை,
சென்னை - 600 001.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,
பல்லவன் சாலை கிளை,
பல்லவன் இல்லம்,
சென்னை - 600 002.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
கிண்டி கிளை
எண். 66, ஜிஎஸ்டி ரோடு.
கிண்டி,
சென்னை - 600 032.

பாங்க் ஆப் பரோடா
இசி சாலை கிளை
எண்.5, இரா.பாலுசெட்டி தெரு,
சென்னை - 600 001.

பேங்க் ஆப் பரோடா
அண்ணாசாலை கிளை
எண். 1, கிளப் அவுஸ் சாலை,
அண்ணாசாலை,
சென்னை - 600 002.

BANKERS:

Indian Overseas Bank,
Cathedral Branch,
762, Anna Salai,
Chennai – 600 002.

State Bank of India,
Overseas Branch,
86, Rajaji Salai,
Chennai- 600 001.

Indian Overseas Bank,
Pallavan Salai Branch,
Pallavan Illam,
Chennai – 600 002.

State Bank of India,
Guindy Branch,
No.66,GST Road,Gunidy
Chennai- 600 032

Bank of Baroda,
EC Street Branch,
NO-5 Errabalu Chetty Street,
Chennai - 600 001.

Bank of Baroda,
Mount Road Branch,
1, Club House Road,
Anna Salai,
Chennai - 600 002.

பதிவு அலுவலகம் :

பல்லவன் இல்லம்,
அண்ணாசாலை,
சென்னை - 600 002

தொலைபேசி : 23455801 (9 இணைப்புகள்)
Grams : “EMTECEBUS”
மின் அஞ்சல் : edp@mtcbus.org
mtc_edp@dataone.in
நிகரி : (091) (044) 23455830

REGISTERED OFFICE:

Pallavan House,
Anna Salai,
Chennai - 600 002.
Phone : 23455801 (9 lines)
Grams : “EMTECEBUS”
E-mail : edp@mtcbus.org
mtc_edp@dataone.in
Fax : (091) (044) 23455830

வ.எண்.	கிளையின் பெயர்	வ.எண்.	கிளையின் பெயர்
1.	அடையாறு	18.	பூவிருந்தவல்லி
2.	ஆலந்தூர்	19.	பாடியநல்லூர்
3.	அம்பத்தூர்	20.	சைதாப்பேட்டை
4.	அண்ணாநகர்	21.	தியாகராயநகர்
5.	ஆவடி	22.	தாம்பரம்
6.	அயனாவரம்	23.	திருவான்மியூர்
7.	அய்யப்பன்தாங்கல்	24.	திருவொற்றியூர்
8.	பேசின் பாலம்	25.	தண்டையார்பேட்டை - I
9.	மத்திய பணிமனை	26.	தண்டையார்பேட்டை - II
10.	குரோம்பேட்டை - 1	27.	வடபழனி
11.	குரோம்பேட்டை - 2	28.	வியாசர்பாடி
12.	எண்ணூர்	29.	ஆதம்பாக்கம்
13.	கே.கே. நகர்	30.	கண்ணகி நகர்
14.	குன்றத்தூர்	31.	பெரும்பாக்கம்
15.	மாதவரம்		
16.	மந்தைவெளி		
17.	பெரம்பூர்		

பிரிவுகள்

1. மா.போ.க. குரோம்பேட்டைதொழிற்பட்டறை
2. பட்டுலாஸ் ரோடு தொழிற்கூடம்
3. தண்டையார்பேட்டை மண்டல தொழிற்கூடம்

முழு தகுதிசான்று பிரிவுகள்

1. அடையாறு
2. குரோம்பேட்டை
3. கே.கே. நகர்
4. வடபழனி
5. அயனாவரம்
6. அம்பத்தூர்
7. தண்டையார்பேட்டை
8. மாதவரம்

டயர் பிரிவு

1. குரோம்பேட்டை
2. தண்டையார்பேட்டை

S.No	Branch Name	S.No	Branch Name
1.	Adyar	18.	Poonamallee
2.	Alandur	19.	Padiyanallur
3.	Ambattur	20.	Saidapet
4.	Anna Nagar	21.	T. Nagar
5.	Avadi	22.	Tambaram
6.	Ayanavaram	23.	Thiruvanmiyur
7.	Iyyappanthangal	24.	Thiruvottriyur
8.	Basin Bridge	25.	Tondiarpet - I
9.	Central	26.	Tondiarpet - II
10.	Chrompet -1	27.	Vadapalani
11.	Chrompet -2	28.	Vyasarpadi
12.	Ennore	29.	Adambakkam
13.	K.K. Nagar	30.	Kannagi Nagar
14.	Kundrathur	31.	Perumbakkam
15.	Madhavaram		
16.	Mandaveli		
17.	Perambur		

WORSHOP

1. M.T.C.W. - Chromepet
2. Patullos Road Workshop
3. Regional Work Shop - Tondiarpet

FULL FC UNITS

1. Adyar
2. Chrompet
3. K.K. Nagar
4. Vadapalani
5. Ayanavaram
6. Ambattur
7. Tondiarpet
8. Madhavaram

TYRE PLANT

1. Chrompet TRP
2. Tondiarpet TRP

தலைவர் உரை

அன்பார்ந்த உறுப்பினர்களே,

உங்கள் நிறுவனத்தின் இந்த 49 வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எனது அன்பான வரவேற்பை அளிக்கிறேன். மார்ச் 31, 2021 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இயக்குநர்களின் அறிக்கை மற்றும் கணக்குகளின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை ஏற்கனவே உங்களுக்குக் கிடைத்திருப்பதை நான் அறிவேன், உங்கள் அனுமதியுடன், நான் படிக்கப்பட்டதாக கருதுகிறேன்.

இப்போது, 2020-2021 ஆம் ஆண்டில் உங்கள் நிறுவனத்தின் செயல்திறனின் சிறப்பம்சங்கள் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்கான நிறுவனத்தின் திட்டங்கள் குறித்தும உங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

ஸ்தாபன செலவு மற்றும் உதிரிபாகங்கள் விலை அடிக்கடி அதிகரிப்பதால் செயல்பாட்டு செலவு ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இதன் விளைவாக, உங்கள் கழகம் வருவாயை அதிகரித்து வரும் செலவினங்களுடன் பொருந்துவதில் சிரமங்களைக் காண்கிறது மற்றும் உங்கள் கழகம் அரசாங்கத்தின் ஆதரவையும் வங்கிகளிடமிருந்து தொடர்ந்து கடன் வாங்குவதையும் சார்ந்துள்ளது மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்க வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கான நிதியை திரட்ட மிகவும் கடினமாகவுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், தேய்மானம் மற்றும் வட்டி இழப்பான ரூ.11133.40 லட்சம் மற்றும் ரூ. 24658.66 லட்சம் செலவினத்திற்கு பின் ரூ.125066.06 லட்சம் நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு இழப்பு ரூ. 81697.91 லட்சமாகும். நிறுவனத்தின் செயல்பாட்டு வருவாய் 31.03.2021 உடன் முடிவடைந்த ஆண்டிற்கு ரூ. 43989.27 லட்சம் ஆகும். இது முந்தைய ஆண்டில் எட்டப்பட்ட வருவாய் ரூ. 107415.75 லட்சம் ஆகும்.

உங்கள் நிறுவனம் 2020 - 2021 ஆம் ஆண்டில், ரூ.113932.66 லட்சம் பண இழப்பைச் சந்தித்துள்ளது. 2019-20 நிதியாண்டில் பண இழப்பு ரூ.73285.58 லட்சங்கள் பதிவாகியுள்ளன. வருவாய் குறைந்ததற்கு இழப்பு அதிகரித்ததற்கும் கோவிட் 19 காரணமாகும். இந்த காலகட்டத்தில் பகுதி அல்லது முழுமையான முடக்கம் மற்றும் ஊரடங்கு உத்தரவு காரணமாக போக்குவரத்து சேவைகளின் செயல்பாடு மோசமாக பாதிக்கப்பட்டது.

முழுமையான முடக்கத்தைத் தொடர்ந்து, அவ்வப்போது அரசாங்கம் வெளியிடும் பேருந்து இயக்கக் கட்டுப்பாடுகள், அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் செயல்பாட்டு மூலதனத்தைச் சந்திக்கவும், எரிபொருள் செலவு மற்றும் சில அத்தியாவசியச் செலவுகளைச் சமாளிக்கவும் வருவாயை ஈட்ட முடியவில்லை. சில நாட்களில், கட்டண பெட்டி சார்ந்த வருவாய் மூலம் எரிபொருள் செலவைக்கூட ஈடுகட்ட முடியவில்லை.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தமிழக அரசு போதுமான அளவு குறுகிய கால கடனாக 68.41 கோடியும், மாணவர்களுக்கான பயண சலுகை மானியத்தை தவிர கூடுதலாக உயர்வேக டீசல் எண்ணெயின் விலை உயர்வால் எழும் கூடுதல் நிதிச் சுமையை ஈடுசெய்ய டீசல் மானியத்திற்கு ரூ. 4274.77 லட்சத்தை தமிழக அரசு அனுமதித்துள்ளது.

2020 - 2021 ஆம் ஆண்டில், தகுதிவாய்ந்த பள்ளி மாணவர்களுக்கு 100 % இலவச பயணஅட்டை வழங்குவதை உங்கள் நிறுவனம் தொடர்கிறது. கல்லூரிகள், பாலிடெக்னிக்ஸ், ஐ.டி.ஐ மாணவர்கள், உடல் ரீதியான சவால் அடைந்த நபர்கள், சுதந்திர போராளி மற்றும் அவர்களின் சட்ட வாரிசுகள், தகுதியான மாணவர்களுக்கு 50% இலவச பயணஅட்டை மற்றும் 1/3 சலுகை பயணஅட்டைகள் பொது மக்களுக்கு அரசாங்க திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. குளிர்சாதன பேருந்துகள் தவிர மாநகர பேருந்துகளில் இலவசமாக பயணிக்க சென்னையில் உள்ள மூத்த குடிமக்களுக்கு உங்கள் நிறுவனம் தொடர்ந்து மாதத்திற்கு 10 டோக்கன்களை வழங்கி வருகிறது.

SAKSHAM (2019-2020ஆம், ஆண்டில் அடையாறு – கண்ணகி நகர் பணிமனைக்காகவும்) (2020-2021அம் ஆண்டில் தி.நகர் – ஆதம்பாக்கம் பணிமனைக்காகவும்) எரிபொருள் சேமிப்பிற்காக மாநில அளவில் சிறந்த பணிமனைக்கான PCRA ரொக்க விருதை உங்கள் நிறுவனம் பெற்றுள்ளது.

CHAIRMAN'S SPEECH

Dear Members:

With great pleasure, I extend my warm welcome to one and all present at this 49th Annual General Meeting of your Company. I am aware that the Report of the Directors and the Audited Financial Statement of Accounts for the year ended 31st March 2021 have already been made available to you and with your permission, I shall take the same as read.

Now, I would like to keep you all informed of the highlights of the performance of your Company during the year 2020-21 and also about the plans of the Company for the year ahead.

You are well aware of the fact that the cost of operation is increasing year by year since the cost of establishment and spares got increased frequently. Consequently your Company finds difficulties to match the revenue to the ever increasing expenditure and your Company depends on the support of Government and continued borrowings from banks and hardly finds money to settle the accumulated dues of terminal benefits to the retired employees.

During the year under review, your Company has sustained a net loss of Rs.125066.06 Lakhs after charging Depreciation and interest of Rs.11133.40 Lakhs and Rs.24658.66 Lakhs respectively as against the net Loss of Rs.81697.91 Lakhs in the previous year. The Operational Revenue of the Company is Rs.43989.27 Lakhs for the year ended 31.03.2021 as against Rs.107415.75 Lakhs achieved in the previous year.

Your company has incurred a cash loss of Rs.113932.66 Lakhs during 2020-21 as against the Cash Loss of Rs. 73285.58 Lakhs reported in 2019-2020. The reason for decrease in Revenue and increase in Loss is due to Covid-19, during the period the operation of services were hit badly due to partial or complete lockdown and curfews.

Following the complete lockdown, bus operational restrictions issued by the Government from time to time, STUs have not been able to generate revenue to meet the working capital, just meet the fuel cost and few other essential expenditures. Some days, fare box revenue could not meet the fuel cost also.

I am pleased to inform that during year under review the Government of Tamil Nadu have sanctioned Rs. 68.41 crores as Term Loan towards disbursement of terminal benefit to exit employees. The Government of Tamil Nadu also have sanctioned Rs.4274.77 Lakhs towards Diesel Subsidy to meet out the additional financial commitment arising out of the raise in price of HSD oil and this amount is in addition to reimbursement of the Students Concession Passes.

During the year 2020-21, your Company has continued the issuance of 100% free passes to the eligible school students, Govt. Colleges, polytechnics, I.T.I students, physically challenged persons, Freedom fighter and their legal heirs, 50% Free passes to the eligible students and 1/3rd Concessions Passes were issued to the General public under the Government Scheme. Your Company continues to provide 10 tokens per month to Senior Citizens at Chennai to travel free of cost in MTC buses except AC buses.

Your Company has received PCRA Cash Award for Best Depot at state level for fuel conservation in Saksham (2019-2020, Adayar & Kannagi Nagar Depot) (2020-2021, T.Nagar & Adambakkam Depot).

"பாதுகாப்பான நகர திட்டங்கள் நிர்பயா திட்டத்தின்" கீழ் மத்திய அரசின் நிதியுதவியுடன், 2500 மாநகர் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளில் பெண் பயணிகளுக்கான பாதுகாப்பு சாதனங்களாக கேமராக்கள் மற்றும் பேனிக் பட்டன்களை நிறுவ உங்கள் நிறுவனம் முன்மொழிந்தது. இந்த திட்டத்தின் கீழ், பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களில் கேமராக்கள் பொருத்தவும் மாநகர் போக்குவரத்துக் கழகம் தலைமை அலுவலகத்தில் சிசிசி உள்கட்டமைப்பை உருவாக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது, மேலும் பேருந்துகளில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட கேமராக்கள் மற்றும் பேனிக் பொத்தான்களுக்கு கூடுதலாக காட்சி வீடியோ மேலாண்மை அமைப்பு (VMS) – வாகன கண்காணிப்பு அமைப்பு (VTS). 2500 பேருந்துகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துதல், பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களில் புல்லட் கேமராக்கள் பொருத்துதல் மற்றும் பொதுக்கட்டுப்பாட்டு மையக் கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், அரசின் வழிகாட்டுதலின்படி. தமிழ்நாட்டின், மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் மும்பையிலுள்ள திருவாளர்கள் Zophop Technologies (P) Ltd., அவர்கள் உதவியுடன் GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாநகர் போக்குவரத்துக் கழக ITS பிரிவு "LAMB" என்ற பெயரில் ஒரு மொபைல் செயலியை உருவாக்கியுள்ளது, இது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்க தயாராக உள்ளது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதி முழுவதும் உங்கள் நிறுவனம் அனைத்து வகை ஊழியர்களுடனும் நல்லுறவைப் பேணி வருகிறது. இதன் விளைவாக அமைப்பின் சீரான செயல்பாடு ஏற்பட்டது. மேலும் எதிர்காலத்திலும் இதேபோக்கு தொடரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். சமீபத்திய தொழில் நுட்பத்துடன் பணியாளர்களைப் புதுப்பிக்க, உங்கள் நிறுவனம் தொடர்ந்து நிர்வாகம் சார்பிலும் வெளி முகவர்கள் மூலமும் பயிற்சி அளித்து வருகிறது.

இயக்குனர்கள் குழுவில் உள்ள அனைத்து சக உறுப்பினர்களுக்கும் அவர்களின் சிறந்த ஒத்துழைப்பு மற்றும் வழி காட்டுதலுக்காக எனது நன்றியைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

நிர்வாக இயக்குநர் மற்றும் அவரது அதிகாரிகள் குழு, நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எனது சிறப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, மற்றும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ஆகியோருக்கு எனது நன்றிகளை பதிவு செய்ய விரும்புகிறேன். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆகியவை சரியான நேரத்தில் உதவி மற்றும் நிதி உதவியமைக்காகவும் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

கழக தணிக்கையாளர்கள், கணக்காய்வாளர்கள், சட்ட ரீதியான தணிக்கையாளர்கள், செயலக தணிக்கையாளர்கள் மற்றும் கணக்கு துறை தலைவர் (தணிக்கை-II) அதிகாரிகள் / பணியாளர்கள், அவர்களின் வழிகாட்டுதலுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி கூறுகிறேன்.

அன்புள்ள உறுப்பினர்களே, உங்கள் கனிவான அனுமதியுடன், 2020-21 ஆம் ஆண்டிற்கான இயக்குநரின் அறிக்கை மற்றும் கணக்குகளின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் ஒப்பளித்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கொள்கிறேன்.

இயக்குனர்கள் குழுவிற்காகவும் அதன் சார்பிலும்,

திரு. டாக்டர். கே.கோபால், இ.ஆ.ப.
தலைவர்,

இடம் : சென்னை - 600 002.
நாள் : 24.11.2021

With Central Government funding under “Safe City Projects – Nirbhaya Scheme” your company proposed to install cameras and panic buttons as Security Devices for Women passengers which are to be fitted in 2500 MTC buses. Under this Project cameras are to be fitted in Depots, Bus Terminus and to build CCC infrastructure at MTC Head office, to View Video Management System (VMS) & Vehicle tracking System (VTS) in addition to the Cameras & Panic Buttons in Buses already planned. Fixing CCTV Cameras in 2500 buses, fixing Bullet Cameras in Depots & Bus Terminus and construction of Common Control Central Building are under progress.

Further, as per the direction of Govt. of Tamil Nadu, MTC(Chennai) Ltd., ITS Wing by using GPS Technology with the help of M/s. Zophop Technologies (P) Ltd., Mumbai developed one Mobile App named “LAMB” which is ready for launching to the public.

Your Company has been maintaining cordial relationship with the employees of all categories throughout the period under review, which resulted in smooth functioning of the organization and I firmly believe that the same trend will continue in the future years also. To keep the employees updated with the latest technology, your company has been continuously giving training, both in-house and through outside Agencies.

I would like to take this opportunity to express my gratitude to all the colleagues on the Board for their excellent co-operation and guidance.

I would like to convey my special thanks to the Managing Director and his team of Officers, the staff and workmen of the Company.

I wish to place on record my thanks to the Government of Tamil Nadu, Government of India, M/s. Tamil Nadu Transport Development Finance Corporation

Limited, Indian Overseas Bank and State Bank of India for their timely help and financial assistance.

I thank the Internal Auditors, Statutory Auditors, Secretarial Auditor and officers/staff of the Accountant General (Audit-II), for their guidance and co-operation.

Dear members, with your kind permission, I now move that the Directors’ report and Audited Financial Statements of Accounts for the year 2020-21 be approved and adopted.

For and on behalf of the Board,

Dr. K. GOPAL,I.A.S,
CHAIRMAN.

Place : Chennai - 600 002,

Date : 24.11.2021

இயக்குநர்களின் அறிக்கை

அன்பான உறுப்பினர்களே,

31.03.2021 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளுடன் இக்கழகத்தின் 49 ஆம் ஆண்டறிக்கையை அளிப்பதில் உங்கள் இயக்குநர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

I. நிதி நிலைமைகள் :

ஆய்வாண்டின் நிதி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(ரூ.இலட்சத்தில்)

விவரங்கள்	2020 – 2021		2019 – 2020	
	தொகை	கிலோ மீட்டர் ஒன்றுக்கான காசுகள்	தொகை	கிலோ மீட்டர் ஒன்றுக்கான காசுகள்
வருமானம் :				
1. இயக்க வருவாய்				
அ. இயக்க வருமானம்	43989.26	3372	107415.75	3733
ஆ. டீசல் விலை உயர்வு இழப்பீடு	4274.77	328	2419.95	84
இ. சலுகை மற்றும் இலவச பயணச்சீட்டுகள் வழங்குதல் ஆகியவற்றில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்த வகையில் அரசிடமிருந்து கிடைத்த வருவாய்	42224.75	3237	31331.39	1089
2. இயக்கம் சாராத வருமானம்	934.45	72	3113.64	108
3. சொத்துக்கள் விற்ற வகையில் ஆதாயம்	414.64	32	119.11	4
மொத்தம்	**91837.87**	**7040**	**144399.84**	**5018**
செலவு				
1. எரிபொருள்	23568.73	1807	44321.19	1540
2. உதிரிபாகங்கள், பழுதுபார்ப்புகள் மற்றும் மசகெண்ணெய்	1399.58	107	3531.46	123
3. டயர்கள், டியூப்புகள், மற்றும் பிளாப்புகள்	576.46	44	1503.37	52
4. பணியாளரமைப்பு	148566.74	11388	139035.73	4832
5. மோட்டார் வாகன வரி மற்றும் அனுமதிக் கட்டணங்கள்	543.98	42	1029.46	36
6. வட்டி மற்றும் நிதிக் கட்டணங்கள்	24658.66	1890	20131.67	700
7. ஏனைய செலவுகள்	6456.38	495	8132.54	283
8. தேய்மானம்	11133.40	853	8412.33	292
மொத்தம்	**216903.93**	**16626**	**226097.75**	**7858**
இந்த ஆண்டுக்கான ஆதாயம் / இழப்பு	**-125066.06**	**-9587**	**- 81697.91**	**- 2840**
ஐந்தொகை விவரக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ஆதாயம்/இழப்பு	**-113932.66**	**-8733**	**- 73285.58**	**- 2548**
வருவாய் ஈட்டும் வகையில் ஓடிய கி.மீ. (இலட்சத்தில்)	**1304.59**		**2877.53**	-
இயக்கப்பட்ட பேருந்து நாட்கள்	**517215.00**		**1030396.00**	-

சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இயக்க வருவாய் கோவிட் பெருந்தொற்று காரணமாக ரூ.63426.49 இலட்சம் குறைந்துள்ளது.

பணியாளரமைப்பு, செலவுகள் அதிகரித்தன் காரணமாக இயக்கச் செலவு முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்தது.

அ) நிர்வாகச் செலவு ரூ.9531.01 லட்சம் அதிகரித்துள்ளது. பணிக்கொடை செலவினங்கள் அதிகரித்தது (இந்த நிதியாண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட ஓதுக்கீடான ரூ.6817.08 லட்சங்கள் மற்றும் நடப்பு ஆண்டு ஒதுக்கீட்டுடன் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது) மற்றும் விடுப்புப் பொறுப்புச் செலவுகள் ரூ.2038.31 லட்சம் அதிகரித்ததே காரணமாகும்.

ஆ) சென்ற ஆண்டை ஒப்பிடுகையில் வட்டிச் செலவு ரூ.4526.99 லட்சம் அதிகரித்து தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவனத்திடமிருந்து பெற்ற காலக்கடன், தவணைக் கொள்முதல் கடன், உடனடிக்கடன், வங்கியிலிருந்து பெற்ற மேல் வளர்பற்று அதிகரித்ததே வட்டி செலவு அதிகரித்ததின் காரணமாகும். கோவிட்19 காரணமாக நடைமுறை மூலதன செலவிற்க்காகவும், ஓய்வூதியம் அளிப்பதற்குமே கடன்கள் அதிகம் பெறப்பட்டது.

இ) மோட்டார் வாகன வரி தவிர்த்து மற்ற செலவுகள் முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது, ரூ.16.76 கோடி குறைந்துள்ளது.

REPORT OF THE DIRECTORS

Dear Members,

The Directors of the Company have great pleasure in presenting the 49th Annual Report of the Corporation containing the Audited Statement of Accounts along with the Report of the Auditors for the year ended 31st March 2021.

1. FINANCIAL RESULTS:

The Financial Performance of your Company during the year under review is shown below

(Rs. In lakhs)

Particulars	2020 - 2021		2019 - 2020	
	Amount	PPK	Amount	PPK
INCOME:				
1. OPERATIONAL INCOME				
A OPERATIONAL REVENUE	43989.26	3372	107415.75	3733
B. HSD hike compensation	4274.77	328	2419.95	84
C. REIMB.OF LOSS ON ISSUE OF CONCESSIONAL/FREE PASSES	42224.75	3237	31331.39	1089
2. NON-OPERATIONAL INCOME	934.45	72	3113.64	108
3. PROFIT ON SALE OF ASSETS	414.64	32	119.11	4
TOTAL	**91837.87**	**7040**	**144399.84**	**5018**
EXPENDITURE:				
1. FUEL	23568.73	1807	44321.19	1540
2. SPARES, REPAIRS & LUBRICANTS	1399.58	107	3531.46	123
3. TYRES, TUBES & FLAPS	576.46	44	1503.37	52
4. ESTABLISHMENT	148566.74	11388	139035.73	4832
5. M.V.TAX & PERMIT FEES	543.98	42	1029.46	36
6. INTEREST AND FINANCE CHARGES	24658.66	1890	20131.67	700
7. OTHER EXPENSES	6456.38	495	8132.54	283
8. DEPRECIATION	11133.40	853	8412.33	292
TOTAL	**216903.93**	**16626**	**226097.75**	**7858**
PROFIT/LOSS FOR THE YEAR	**-125066.06**	**-9587**	**- 81697.91**	**- 2840**
CASH GENERATION for the Year	**-113932.66**	**-8733**	**- 73285.58**	**- 2548**
EFFECTIVE KILOMETRES (in lakhs)	**1304.59**		**2877.53**	**-**
OPERATED BUS DAYS	**517215.00**		**1030396.00**	**-**

The Operational Revenue during the year under review has decreased by the tune of Rs.63426.49 lakhs when compared to the previous year mainly due to non operation of vechicles due to covid-19 pandamic..

The cost of operation has gone up when compared to the previous year especially in Establishment cost.

a) The Establishment cost has increased by Rs.9531.01 Lakhs. This is mainly due to increase in Gratuity expenses (The withheld provision by Rs.6817.08 Lakhs along with current year provision were accounted during this financial year) and increase in Leave Liability expenses by Rs.2038.31 Lakhs.

b) The expenditure on interest has increased by Rs.4526.99 Lakhs due to increase in receipt of Term Loan from TDFC, H.P.Loan and adhoc loan and Bank over draft facilities when compared to the previous year. Increase in loan is mainly to meet working capital and pension requirement in full due to Covid-19.

c) The other expenses excluding M.V.Tax have decreased by Rs.16.76 corers, when compared to the previous year.

2. இயக்க செயல் திறன்

சில முக்கிய இயக்க செயல்திறன் குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :

வ.எண்.	விவரங்கள்	2020-21	2019-20
1.	பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை இலட்சத்தில் (சலுகை பயணச்சீட்டுகள் உட்பட)	3349.42	11294.42
2.	மொத்த கொள்ளளவில் பயணம் செய்தவர்களின் விகிதாச்சாரம்	41.12	60.40
3.	நாளொன்றுக்கு ஒரு பேருந்து ஓடிய சராசரி கி.மீ.	252	279
4.	பேருந்துகள் பழுதடைந்து நின்றுவிட்ட எண்ணிக்கை	49	33
5.	10,000 கி.மீட்டர்களுக்கு பழுதடைந்த பேருந்துகளின் விகிதம்	0.004	0.001
6.	1,00,000 கி.மீட்டர்களுக்கு ஏற்பட்ட விபத்துகள்	0.59	0.54
7.	ஒரு லிட்டர் உயர்வேக டீசல் எண்ணெய்க்கு ஓடிய கி.மீ.	4.39	4.44
8.	சராசரியாக ஒரு டயர் பயனற்றதென ஒதுக்கப்படும் வரை ஓடிய கி.மீ.	264458	253415
9.	வருவாய் ஈட்டும் வகையில் ஓடிய கி.மீ. (இலட்சத்தில்)	1304.59	2877.53
10.	ஒரு நாள் நிலவரப்படி இயக்கப்பட்ட பேருந்து நாட்கள்	517215	1030396

3 நிதியுதவி

2020-21 ஆம் ஆண்டில் முதலீட்டுத் திட்டங்களை அமல்படுத்துவதற்காகவும் நடைமுறை மூலதன தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் தமிழ்நாடு அரசு குறுகிய காலக்கடன் மற்றும் வழிவகை முன்பணம் வழங்கியுள்ளது. அதேபோன்று தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனமும் முதலீட்டு காரணங்களுக்காகவும் நடைமுறை செலவுகளுக்காகவும் பல்வேறு வகையில் நிதியுதவி அளித்துள்ளது. அவ்வாறு பெறப்பட்ட மற்றும் திரும்ப கொடுக்கப்பட்ட கடன் விபரங்கள் மற்றும் இந்நிதியாண்டின் இறுதியில் இருந்த நிலுவை விபரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

விவரங்கள்	01.04.20 அன்று தொடக்க இருப்பு	பெற்ற தொகை	மொத்தம்	சரிகட்டிய / திரும்ப செலுத்திய தொகை	31.03.21 அன்று இறுதி இருப்பு
தவணைக் கொள்முதல் கடன்	19833.55	2923.86	22757.41	3748.41	19009.00
குறுகிய காலக் கடன்	0.00	49849.54	49849.54	0.00	49849.54
குறித்த காலக் கடன்	102170.99	43174.47	145345.46	48527.11	96818.35
உடனடிக் கடன்	2349.68	0.00	2349.68	2349.68	0.00
அரசின் குறித்த காலக் கடன்	60347.83	6841.00	67188.83	0.00	67188.83
அரசின் வழிவகை முன்பணம்	31705.25	0.00	31705.25	20.87	31684.38
தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற வட்டியில்லா கடன்	42989.77	0.00	42989.77	0.00	42989.77
மொத்தம் கடன்	259397.07	102788.87	362185.94	54646.07	307539.87

4. பணியாளர் மற்றும் நல நிர்வாகம் :

பணியாளர் மற்றும் நிர்வாகத்திற்கு இடையிலான உறவு சுமூகமாக இருந்தது. நிறுவனம், செம்மையாகவும், சுமூகமாகவும் செயல்படுவதற்கு அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்கள், தங்கள் முழு ஒத்துழைப்பை நல்கினர்.

2. PHYSICAL PERFORMANCE:

The important physical parameters are given below:

Sl.No.	Particulars	2020-21	2019-20
1	No. of passengers carried (in lakhs) (including Concessional tickets)	3349.42	11294.42
2	Occupancy Ratio (%)	41.12	60.40
3	Avg. daily KMs./Bus/Day	252	279
4	No. of breakdowns	49	33
5	Breakdowns ratio per 10000 KMs.	0.004	0.001
6	Accidents/100000 KMs.	0.59	0.54
7	KMPL (HSD Oil)	4.39	4.44
8	Average Tyre life in kilometers	264458	253415
9	Effective KMS (in Lakhs)	1304.59	2877.53
10	Actual/Operated Bus days	517215	1030396

3. FINANCIAL ASSISTANCE:

During 2020-21 the Government have sanctioned Short Term loans to Meet the working capital requirements. M/s. Transport Development Finance Corporation Limited has also provided financial assistance for the various working capital requirements. The particulars of loans received and loans repaid during the year and the balance at the close of the financial year are furnished below:

(Rs. In Lakhs)

Loan	Opening Balance as on 01.04.2020	Receipts	Total	Repayment / Adjustment	Closing Balance as on 31.03.2021
H.P.Loan	19833.55	2923.86	22757.41	3748.41	19009.00
S.T.Loan	0.00	49849.54	49849.54	0.00	49849.54
Term Loan	102170.99	43174.47	145345.46	48527.11	96818.35
Adhoc Loan	2349.68	0.00	2349.68	2349.68	0.00
Govt. of TN ST Loan	60347.83	6841.00	67188.83	0.00	67188.83
Govt. Ways & Means Adv	31705.25	0.00	31705.25	20.87	31684.38
Int.free loan from Govt. of TN	42989.77	0.00	42989.77	0.00	42989.77
Total Loan	259397.07	102788.87	362185.94	54646.07	307539.87

4. PERSONNEL AND WELFARE MANAGEMENT:

Cordial relationship prevailed between the employees and the management all along the review period and the employees at all levels extended their full co-operation for efficient and smooth functioning of the company.

5. எரிபொருள் சிக்கனம் மற்றும் பயற்சி :

எரிபொருள் சேமிப்பினை மேம்படுத்துவதற்காக பின்வரும் எரிபொருள் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஓட்டுநர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட வரையறைக்கும் குறைவாக ஒரு லிட்டருக்கு கி.மீட்டர் அளிக்கும் ஓட்டுநர்கள் ஆகியோருக்கு பயிற்சி மையங்களில் எரிபொருள் திறனை மேம்படுத்த, பயிற்சி அளிக்க தங்கள் கழகம் 4 ஓட்டுநர் பயிற்சி மையங்களை கொண்டுள்ளது.

ஓட்டுனர்களுக்கு தனித்தனியாகவும் குழுவாகவும் ஓட்டுனர் பயிற்சியாளர் மற்றும் மூத்த அலுவலர்கள் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. எரிபொருள் சேமிப்பை மேம்படுத்தும் பொருட்டு தவறிழைக்கும் ஓட்டுநர்களைக் கண்காணித்து அவர்களுக்கு அறிவுறுத்துவற்காக பேருந்து எண்ணிக்கையைப் பொறுத்து அனைத்துக் கிளைகளிலும் ஓட்டுநர் பயிற்றுவிப்பாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தகுந்த கால இடைவெளியில் உரியவாறு பேருந்துகள் புகை வெளியிடாமல் இயங்குகிறதா என ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. மாசு ஏற்படுத்துகிற காரணிகளை சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதற்காக இக்கழகம் புகை வெளியிடுதல் குறித்து சோதனை செய்யும் 4 மையங்களைக் கொண்டுள்ளது.

6. சமூகக் கடப்பாடு

சமூகத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டியது ஒவ்வொரு கூட்டாண்மையின் கடமையாகும். வரியவர்கள் பச்சாதாபத்திற்கும், மேம்பாட்டிற்கும்தகுதி வாய்ந்தவர்கள். ஆய்வாண்டில் உங்களது நிறுவனம் பார்வையற்றோர், மாற்றுத் திறனாளிகள், பத்திரிகையாளர்கள், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோர், எல்லைப் போராட்டத்தில் பங்கேற்றோர், 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பயண அனுமதி வழங்குவதைத் தொடர்ந்து வருகிறது. நிறுவனம் மூத்த குடி மக்களுக்கு இலவச பயண வில்லைகளை அளித்துள்ளது.

7. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் இணக்கம்

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 134 உடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (கணக்கு) விதிகள், 2014-ற்கு இணங்க உங்களது நிறுவனம், நிறுவனங்கள் சட்டம், 2013-ல் கூறியுள்ள உடன்பாட்டுத் தேவைகளின்படி பின்வருமாறு உடன்பட்டுள்ளது.

(அ) இந்த ஆண்டில் நடைபெற்ற இயக்குனர்கள் குழுக்கூட்டங்கள்

தொ. எண்.	கூட்டம் நடைபெற்ற தேதி	மொத்த இயக்குநர்கள்	பங்கேற்ற இயக்குநர்கள்
1	24.08.2020	15	11
2	07.12.2020	15	9
3	02.03.2021	15	6

(ஆ) ஆண்டு கணக்கு விவர அறிக்கையின் பகுதி நகல்

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 92(3) ஆம் பிரிவின் கீழ் வகைசெய்துள்ளவாறு, ஆண்டு கணக்கு விவர அறிக்கையின் பகுதி நகல், MGT-9 படிவத்தில், இயக்குநர்கள் அறிக்கையின் இணைப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

(இ) நிதியாண்டின் இறுதிக்கும், 31.03.2021 ஆம் நாளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்துள்ள கழகத்தின் நிதிநிலையை பாதிக்கிற முக்கியமான மாற்றங்கள் ஏதுமில்லை.

(ஈ) செயலகத் தணிக்கை :

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் பிரிவு 204 உடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (நிர்வாக பணியாளர்களின் நியமனம் மற்றும் ஊதியம்) விதிகள் 2014 ன்படி திரு. கே. மெய்யநாதன், பி.காம், எப்.சி.எஸ்., பி.ஜி.எல்., 2020-21 ஆம் நிதியாண்டுக்கான செயலகத் தணிக்கையாளர்களாக, இயக்குநர்கள் குழுவினரால் நியமிக்கப்பட்டுள்ளனர். செயலகத் தணிக்கையாளாக்களின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. செயலகத் தணிக்கை அறிக்கை, பாதகமான குறிப்புரைகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

5. FUEL CONSERVATION & TRAINING:

The energy conservative measures taken to improve the efficiency of Fuel by the Corporation are as follows:

The Corporation is having 4 Driver Training Centers to train the newly recruited drivers and the drivers who give lesser KMPL are given training to improve the fuel efficiency.

Individual Driver counseling and Group counseling are given to Driving Instructors and Senior Officials. Driving Instructors are posted at all Depots depending upon the fleet strength to monitor and educate the drivers to improve the morale, efficiency and thereby improve the fuel efficiency.

Inspection of vehicles is carried out in frequent intervals with relevant to emission of smoke. We are having 4 smoke emission checking centers to control the smoke pollution.

6. SOCIAL OBLIGATION:

It is the responsibility of every Corporate to contribute to the society. The deprived deserve empathy and upliftment. During the year under review, your Company continues to extend free travel concession to Blind persons, Differently Abled persons,

Freedom Fighters, Press Reporters, persons participated in Language Stirs and allowed free travel concession to students studying upto +2 and students studying in Govt. Arts & Science Colleges, Community Colleges and Govt. Polytechnic and extended concession fare to other students. Free Travel tokens are issued to Senior Citizens also.

7. COMPLIANCE UNDER COMPANIES ACT, 2013

Pursuant to Section 134 of the Companies Act, 2013 read with the Companies (Accounts) Rules, 2014, your company complied with the compliance requirements and the detail of compliances under Companies Act, 2013 are enumerated below.

a. Board Meetings held during the year

Sl.No.	Date of Meeting	Total No. of Directors	No.of Directors present
1	24.08.2020	15	11
2	07.12.2020	15	9
3	02.03.2021	15	6

b. The extract of the annual return in MGT-9 as provided under Section 92(3) of the Companies Act, 2013, is attached to the Directors' Report.

c. Material changes and commitments affecting the financial position of the company which have occurred between 31.03.2021 and the date of report is NIL.

d. Secretarial Audit:

Pursuant to Section 204 of Companies Act, 2013 and read with Rule (9) of the companies (appointment and remuneration of Managerial personnel) Rules, 2014 Thiru K.Meyyanathan, B.Com, FCS, BGL has been appointed by Board as Secretarial Auditor for the financial year 2020-21. The report of the Secretarial Auditor is annexed. The Secretarial Audit report does not contain any adverse remarks

உ. கூட்டாண்மை நிறுவன சமூகப் பொறுப்புடைமைக்குழு

கூட்டாண்மை நிறுவன சமூகப் பொறுப்புடைக்குழு ஒன்று, கீழ்க்காணும் உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

1) நிதித்துறையை குறிக்கும் - இயக்குநர்

2) மகளிர் மற்றும் தற்சார்பு - இயக்குநர்

3) மேலாண்மை இயக்குநர், மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது.

கடந்த மூன்று நிதியாண்டுகளாக கழகம் நட்டத்தையே அடைந்துள்ளதால், கழகம் சமூகப் பொறுப்புடைமைத் திட்டத்தின் கீழ் செலவுகள் ஏதும் செய்யவில்லை.

8 தொடர்புடைய நபர்களுடன் பரிவர்த்தனைகள்:

2020 – 2021 நிதியாண்டில் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 188 இன் துணைப் பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொடர்புடைய தரப்பினருடன் எந்த ஏற்பாடுகளும்/ஒப்பந்தங்களும் இல்லை.

9. அந்நிய செலாவணி பரிவர்த்தனைகள்:

2020 – 2021 நிதியாண்டில், அந்நியச் செலாவணி வருவாய்/செலவினங்கள் எதுவும் இல்லை.

10. இயக்குநர்களின் பொறுப்பு குறித்த அறிக்கை

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 134 (3) (c) யில் குறிப்பிட்டவாறு இக்கழக இயக்குநர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்கின்றனர் :

அ. நிலையான கணக்குப் பதிவு விதிகளையும், அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளையும் பின்பற்றி முடிவுற்ற ஆண்டில் மாறுபாடு ஏதாவது இருப்பின் அதற்கான விளக்கங்களுடன் இக்கழகத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன;

ஆ. ஆண்டின் இறுதியில் இக்கழகத்தின் கணக்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆதாய இழப்பு கணக்கும், ஐந்தொகை கணக்கின் ஆதாயம் அல்லது இழப்பு குறித்த நிதிநிலைகளும் உண்மையானதாகவும், சரியானதாகவும் அமைந்திட, தேவையான மற்றும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீட்டுக் கோட்பாடுகளும் இயக்குநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்பற்றப்பட்டுள்ளன;

இ. இக்கழகத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுக்கவும் 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள தேவையான கணக்குப் பதிவேடுகளை பாதுகாப்பதற்காக போதுமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது;

ஈ. முடிவடைந்த நிதியாண்டுக்கு தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன;

உ. பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களின் விதித் துறைகளுக்கும் இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, இயக்குநர்கள், முறையான ஏற்பாட்டை வகுத்துள்ளனர். அத்தகைய ஏற்பாட்டு முறைகள் போதுமானவையாக இருப்பதுடன், செம்மையான முறையிலும் செயல்படுத்தப்பட்டன.

11 கூட்டாண்மை ஆளுமை

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 177 (2)-ன்படி கழகம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட தணிக்கைக் குழுவினைக் கொண்டுள்ளது.

1. நிதித்துறையை குறிக்கும் இயக்குனர்
2. தற்சார்பு இயக்குனர்
3. மகளிர் மற்றும் தற்சார்பு இயக்குனர்
4. மேலாண்மை இயக்குனரும், தலைமை நிதி அலுவலரும் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இணைத்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களாவர்.
5. நிறுவனங்கள் சட்டம் 2013-ன்படி குழுக் கூட்டம் குறிப்பிட்டபடி அவ்வப்போது கூட்டப்பட்டது.

e. Corporate Social responsibility Committee:

A Corporate Social Responsibility Committee has been formed with the following members:

1. Director representing Finance Department
2. Independent Director-cum-Woman Director
3. Managing Director, Metropolitan Transport Corporation (Chennai) Limited.

As the corporation has incurred loss during the three consecutive financial years, the Corporation has not spent any amount towards Corporate Social Responsibility Schemes.

8. RELATED PARTY TRANSACTIONS:

There is no arrangements / contracts with related parties as referred to in sub Section (1) of Section 188 of the companies Act, 2013 during the financial year 2020 - 2021.

9. FOREIGN EXCHANGE TRANSACTIONS:

During the financial year 2020-2021, there is no Foreign Exchange receipts/outgo.

10. DIRECTORS' RESPONSIBILITY STATEMENT:

As required in the Section 134(3) (c) of the Companies Act, 2013, your Directors confirm, that

a) In the preparation of the Annual Accounts, the applicable accounting standards had been followed along with proper explanation relating to material departures;

b) The directors had selected such accounting policies and applied them consistently and made judgments and estimates that are reasonable and prudent so as to give a true and fair view of the state of affairs of the Company at the end of the financial year and of the profit and loss of the company for that period;

c) The directors had taken proper and sufficient care for the maintenance of adequate accounting records in accordance with the provisions of this Act for safeguarding the assets of the company and for preventing and detecting fraud and other irregularities;

d) The directors had prepared the Annual Accounts on a going concern basis; and

e) The directors had devised proper systems to ensure compliance with the provisions of all applicable laws and that such systems were adequate and operating effectively.

11. CORPORATE GOVERNANCE:

In pursuance to Section 177(2) of the Companies Act, 2013, your Company has reconstituted the Audit Committee as a Sub Committee to the Board, consisting of the following members :

1. Director representing from Finance Department.
2. Independent Director
3. Independent-cum-Woman Director
4. The Managing Director & Chief Accounts Officer of Metropolitan Transport Corporation (Chennai) Limited as co-opted Members.
5. The Committee Meeting has been convened periodically for the purpose, as envisaged of under companies Act 2013.

12. தற்சார்பு இயக்குநர் / முக்கியமான நிருவாகப் பணியாளர்

திரு. ட்டி. வீரபத்ரன், எப்.சி.ஏ., ஏ.சி.எஸ்., மற்றும் திருமதி. பிரியா வேணுகோபால், எப்.சி.ஏ., டி.ஐ.எஸ்,ஏ, ஆகியோர் முறையே தற்சார்பு இயக்குநராகவும், மகளிர் மற்றும் தற்சார்பு இயக்குநராகவும் 2020 - 21 ஆம் நிதியாண்டில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 149(6) ஆம் பிரிவின் கீழ், தற்சார்பு இயக்குநர்கள், உறுதிமொழி அறிக்கைகளை அளித்துள்ளனர்.

இந்த நிதியாண்டில், கீழ்க்காணும் பணியாளர்கள், முக்கியமான நிருவாகப்பணியாளர் அலுவலை ஆற்றியுள்ளனர்.

திரு. ஜி. கணேசன், மேலாண்மை இயக்குநர். (11.11.20வரை)

திரு. கே. இளங்கோவன், மேலாண்மை இயக்குநர் (18.11.20 வரை)

திரு. எஸ். ராதாகிருஷ்ணன், முதன்மை நிதி அலுவலர். (30.06.21 வரை)

திரு. வி. சங்கர், முதன்மை நிதி அலுவலர் (01.07.21 முதல்)

13. 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 186 ஆம் பிரிவின் கீழ் கடன்கள், உத்தரவாதங்கள் அல்லது முதலீடுகள் பற்றிய விவரங்கள்.

அறிக்கையாண்டில், கழகம், கடன்கள் எதுவும் வழங்கவில்லை அல்லது 2013 ஆம் நிறுவனங்கள் சட்டத்தின் 186 ஆம் பிரிவின் நிதித் துறைகளின் கீழ் வருகிற முதலீடுகள் எதனையும் செய்யவில்லை அல்லது உத்தரவாதங்கள் எதனையும் எழுதிக் கொடுக்கவில்லை.

14. இயக்குனர்கள் குழு மதிப்பாய்வு

உங்கள் கழகம் நிறுவனங்கள் சட்டம், 2013-ன்படி குறிப்பிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் உச்சபட்ச தரமான கூட்டாண்மை ஆளுமை நடைமுறைகளை எல்லா நடவடிக்கைகளிலும் பின்பற்ற நம்பிக்கை கொண்டும் பின்பற்றியும் வருகிறது.

15. இயக்குநர்கள் குழு :

இயக்குநர்கள் குழுவில் பின்வரும் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

வ. எண்.	குழுவில் சேர்ந்த இயக்குநர்கள்
	திருவாளர்கள் / திருமதி
1.	மகேஷ்குமார் அகர்வால்
2.	சி. சமயமூர்த்தி
3.	கே. இளங்கோவன்
4.	சன்சோங்கம் ஜடக் சிரு
5.	கே. நந்தகுமார்
6.	வி. வெங்கடராஜன்

வ. எண்.	குழுவிலிருந்து சென்ற இயக்குநர்கள்
	திருவாளர்கள் / திருமதி
1.	ஏ.கே. விஸ்வநாதன்
2.	தர்மேந்திர பிரதாப் யாதவ்
3.	ஜி. கணேசன்
4.	டி. கார்த்திகேயன்
5.	எச். கிருஷ்ணன் உன்னி
6.	எம். சுகுமார்

பொறுப்பிலிருந்து சென்ற இயக்குநர்கள் ஆற்றிய மதிப்புமிக்க பணிகளுக்காக, இயக்குநர்கள் குழு தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

16. தொழில் நுட்பத்தை பின்பற்றுதல் ஆய்வு மற்றும் மேம்பாடு

சென்னையிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக, தொழில் நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் பூனாவில் உள்ள மத்திய சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் புதுடில்லியில் உள்ள அரசு சாலைப்போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆகியவை நாட்டிலுள்ள அனைத்து அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்காக பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

12. INDEPENDENT DIRECTOR / KEY MANAGERIAL PERSONNEL:

Thiru T.Veerabathran, FCA, ACS, and Tmt. Priya Venugopal, FCA,DISA, have been acted as independent director and woman cum independent director respectively during the financial year 2020 - 21

Declaration statements were obtained from the Independent Directors under section 149 (6) of the companies Act, 2013.

During the financial year, the details of Key Managerial Personnel are given below:-

Thiru G.Ganesan	-	Managing Director (Upto 11.11.20)
Thiru K.Elangovan	-	Managing Director (Upto 18.11.20)
Thiru S.Radhakrishnan	-	Chief Financial Officer (Upto 30.06.21)
Thiru S.Sankar	-	Chief Financial Officer (From 01.07.21)

13. PARTICULARS OF LOANS, GUARANTEES OR INVESTMENTS UNDER SECTION 186 OF THE COMPANIES ACT, 2013

During the year under review, the Company had not given any loans or executed any guarantees or made investments covered under the provisions of Section 186 of the Companies Act, 2013.

14. BOARD EVALUATION :

This Corporation always believes to the highest standards of Corporate Governance Practice in all activities and processes in accordance with the provisions of the Companies Act, 2013.

15. CHANGE IN DIRECTORS :

The following changes took place in the composition of Board of Directors:

Sl. No.	INCOMING Tvl./Tmt
1.	MAHESH KUMAR AGGARWAL
2.	C.SAMAYAMOORTHY
3.	K.ELANGOVAN
4.	SHUNCHONNGAM JATAK CHIRU
5.	K.NANTHA KUMAR
6.	V.VENKATARAJAN

Sl. No.	OUTGOING Tvl./Tmt
1	A.K.VISWANATHAN
2	DHARMENDRA PRADAP YADAV
3	G.GANESAN
4	D.KARTHIKEYAN
5	H.KRISHNAN UNNI
6	M.SUKUMAR

The Board wishes to record the appreciation for the valuable services rendered by the outgoing Directors.

16. TECHNOLOGY ABSORPTION - RESEARCH AND DEVELOPMENT :

The Institute of Road Transport, Chennai, on behalf of all the Transport Corporations in Tamilnadu, is carrying out research and development activities. Moreover, the Central Institute of Road Transport, Pune and the Association of State Road Transport Undertakings, New Delhi, are conducting various studies on behalf of the State Transport Undertakings all over the country.

17. தணிக்கையாளர்கள் :

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 2020 - 2021 ஆம் ஆண்டுக்கு சென்னை, திருவாளர்கள் எஸ்.எல்.காடியா, அன்டு கோ என்ற பட்டயக் கணக்கர்கள் நிறுவனத்தை கழகத்தின் சட்டப்படிக்கான தணிக்கையாளர்களாக நியமித்தார். சட்டப்படிக்கான தணிக்கையாளர்கள், கழகத் தணிக்கையாளர்கள், மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் ஆகியோர் அளித்த ஒத்துழைப்புக்காகவும் வழிகாட்டுதலுக்காகவும் இக்கழகத்தின் இயக்குநர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். நிறுவனத்தின் மார்ச் 31, 2021 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் குறித்த இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் கருத்துக்கள் ஏதுமில்லை. தணிக்கையாளர்கள் தங்கள் அறிக்கைகளில் பங்குதாரர்களுக்கு தெரிவித்த கருத்துக்களுக்கான பதில்கள் இந்த அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

18. உட்தணிக்கை கட்டுப்பாட்டு முறைகள்

உங்களது கழகம் அதன் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க, சொத்துக்களைக் காக்க, மோசடி மற்றும் தவறுகளை தடுக்க மற்றும் கண்டுபிடிக்க, முழுமையான துல்லியமான கணக்கு அறிக்கைகளை உரிய நேரத்தில் தயாரிக்கவும், நம்பத்தக்க வகையிலும் நிறுவனத்தின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஈடான வகையிலும் நிதித் தகவல்களை தயாரிக்கவும் ஒழுங்கு முறையான மற்றும் திறன்பட்ட முறையில் அலுவல் நடத்துவதை உறுதி செய்யும் வகையிலும் போதுமான உள்ளக நிதிக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. வெளி முகமைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் உட்தணிக்கை அறிக்கைகள் ஒவ்வொரு காலாண்டிலும் தணிக்கை குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, வேண்டிய இடங்களில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு வருகிறது. வெளிமுகமை உட்தணிக்கையாளர்கள் உள்ளக நிதிக் கட்டுப்பாடு குறித்து சிறப்பு அறிக்கையையும் அளிக்கின்றனர், அவ்வறிக்கையின் பேரில் சரி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக நிதிக்கட்டுப்பாடுகள், 2018 கையேடு அச்சிடப்பட்டு தணிக்கையாளர்களுக்கு சுற்றில் அனுப்பப்பட்டுள்ளது.

19. பணியிடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல் தடுப்பு

பணியிடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல் (தடுத்தல், தடைசெய்தல் மற்றும் தீர்த்தல்) சட்டம், 2013 ன்படி 2020 - 21 ஆம் ஆண்டில் உங்களது நிறுவனம் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல் குறித்து எந்த ஒரு முறையீட்டையும் பெறவில்லை.

20. நன்றியுரை :

இக்கழகத்தின் மூலதன மற்றும் நடைமுறை செலவுகளுக்கு தேவையான தொகையினை உரிய காலத்தில் வழங்கியதற்காகவும், வழிகாட்டுதலுக்காகவும் இக்கழக இயக்குநர்கள் இந்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர். அரசுச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, திருவாளர்கள் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், அனைத்து வங்கிகளின் அதிகாரிகள் ஆகியோர் உரிய நேரத்தில் ஆதரவு தந்து நிதியுதவி அளித்ததற்காக இக்கழக இயக்குநர்கள் நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர்.
இக்கழகத்தின் மேலாண் இயக்குநர், பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆற்றிய மாசற்ற பணிகளுக்காக இயக்குநர்கள் தங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இயக்குநர் குழுவிற்காகவும் அதன் சார்பிலும்,
திரு. டாக்டர். கே.கோபால், இ.ஆ.ப.
தலைவர்.

இடம் : சென்னை
நாள் : 24.11.2021

17. AUDITORS :

M/s. S.L.Gadhiya & Co., Chartered Accountants, Chennai are appointed as Statutory Auditors of the Corporation, for the year 2020-21, by the Comptroller and Auditor General of India. A copy of the **Nil** comments of the Comptroller and Auditor General of India, on the accounts of the Company for the year ended 31st March 2021, is annexed. The replies to the observations made by the Statutory Auditors in their reports to the shareholders are given in the addendum to this report. Your Directors wish to express their thanks to the Statutory Auditors, Internal Auditors and the Accountant General for their co-operation and guidance.

18. INTERNAL AUDIT CONTROL SYSTEM :

Your Corporation has adequate internal financial controls for ensuring the orderly and efficient conduct of its business, including adherence to the Corporation's policies, safeguarding of its assets, the prevention and detection of frauds and errors, accuracy and completeness of the accounting records and the timely preparation of reliable financial information, which is commensurate with the operations of the Corporation. The Internal Audit Reports (External Agencies) are reviewed every quarter by the Audit Committee and suitable corrective actions are taken wherever required. The Internal Financial Control Manual, 2018 has been approved by the Board for adoption.The manual has got printed and circulated among the Auditor.

19. PREVENTION OF SEXUAL HARASSMENT OF WOMEN AT WORK PLACE

As per Sexual Harassment of Women at work place (prevention, prohibition and redressal) Act, 2013 your Company have not received any complaints regarding sexual harassment during the year 2020-21.

20. ACKNOWLEDGEMENT :

The Directors of the Company convey their sincere thanks to the Government of Tamilnadu, the office of the Accountant General, Statutory Auditors, Company Secretarial Auditors and the internal Auditors of the Corporation of their guidance and assistance. The helping hands lent by the Government of Tamilnadu. Tamil Nadu Transport Development Finance Corporation Limited, and the Banks are recorded with gratitude.

The Directors of the Company wish to place on record their sense of appreciation for the unblemished services rendered by the Managing Director, Officers and Employees at all levels without which the all round improvements could not be possible.

For and on behalf of the Board,
Dr. K. GOPAL,I.A.S,
CHAIRMAN

Place : Chennai
Date : 24.11.2021

இயக்குநர்களின் அறிக்கைக்கு இணைப்பு

திருவாளர்கள் எஸ். எல். காடியா அன்டு கோ பட்டயக் கணக்கர்கள், சென்னை - 600 007

அவர்களின் அறிக்கையினை காண்க.

1. A. வருவாயை ஏற்றுக் கொள்ளல் :

அ) பயனற்றதென ஒதுக்கி வைக்கப்பட்ட பேருந்து, கடை வாடகை மற்றும் பயனற்ற பொருட்களை விற்றதின் மூலம் கிடைத்த வருவாய் ரொக்க அடிப்படை யில் கணக்கிடப்பட்டுள்ளது. 2020 - 21 ஆம் ஆண்டில் பேருந்தில் செய்யப்பட்ட விளம்பர வருவாய் சேர்ந்து வந்த அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளது. இதர விளம்பர வருவாய் ரொக்க அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டு வருகிறது. இது குறித்து குறிப்பு எண். 27 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் A7 (a) & (c)-ன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. B கையிருப்புப் பொருட்கள்

அடுத்துவரும் நிதியாண்டில் கண்டிப்பாக தீர்வு செய்வதற்காக வைத்துள்ள ரூ.1.84 இலட்சம் மதிப்புள்ள புழக்கமில்லா பொருட்களை "நடப்பிலுள்ளவை" "நடப்பற்றவை" எனப் பிரித்து அறிய அளவுகோல் ஏதுமில்லை. இது குறித்து, குறிப்பு எண் 27 "குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்" A (6) B (III), (c) லும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. C. தேய்மானம் :

கழகம் கொள்முதல் செய்யப்பட்ட/சுயமாகக் கட்டப்பட்ட பேருந்துகள் பதிவு செய்த நாளிலிருந்தே தேய்மானம் கணக்கிடும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இது பற்றி குறிப்பு எண். 27 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் A3(c) ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. D. வருங்கால வைப்பு நிதி மற்றும் E. ஓய்வூதிய நிதி :

கழகம் நிர்வாகப் பங்குத் தொகையாக 12% மட்டுமே ஓய்வூதிய நிதிக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளது. எனவே, கழகத்தின் ஓய்வூதிய நம்பகத்திற்கு அளிக்கப்படும் பங்களிப்பு "வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகவே" தொடர்கிறது. எனவே, மாநகர் போக்குவரத்துக் கழகம் உண்மையான மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இது குறித்து ஓய்வூதிய நம்பகமே அதன் விதிகளின்படி கவனத்தில் கொள்ள வேண்டும்.

வருங்கால வைப்பு நிதி நம்பகத்திற்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகைக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை உரிய முறையில் புத்தகங்களில் காணப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிதியாண்டும் மாநகரப் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் - ன் கணக்குகள் முடிவுற்றபின்னரே வருங்கால வைப்பு நிதி நம்பகக் கணக்குகள் முடிக்கும் பணி துவங்கப்படுகிறது. மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் கணக்குகளை இறுதி செய்த பின்னரே ஒவ்வொரு நிதியாண்டுக்கான வருங்கால வைப்பு நிதி அறக்கட்டளையின் கணக்குகளை இறுதி செய்வது, வருங்கால வைப்பு நிதி சந்தாவுக்கான வட்டி விகிதங்கள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு மத்திய அரசால் அறிவிக்கப்படுவதே இதற்குக் காரணம். வருங்கால வைப்பு நிதி நம்பகக் கணக்குள் ஒவ்வொரு நிதி ஆண்டும் ஆண்டின் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்திலேயே முடிக்கப் பெறுகிறது. எனவே, முந்தைய நிதியாண்டின் இழப்பு நடப்பு நிதியாண்டில் கணக்கீடு செய்யப்படுகிறது. நம்பகம் துவங்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து இந் நடைமுறை கடை பிடிக்கப்பட்டு வருகிறது.

வருங்கால வைப்பு நிதி நம்பகம் மற்றும் ஓய்வுதிய நிதிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டது என்பது குறித்த விபரம் குறிப்பு எண் 27 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் A 20(e) - மற்றும் A11 என்பதன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. F. பணிக்கொடை :

